தமிழ்ப் பொழில்.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௩௧	திருவள்ளுவர் யாண்டு ௲௯௮௭ மன்மத, தை, 1956 ஜனவரி, பிப்ரவரி.	மலர் ௰.

கலை மாநாடு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கிழக்குநாட்டுக் கலை ஆராய்ச்சி மாநாட்டு 18 ஆவது கூட்டம் சென்ற திங்களினிறுதியில் இன்னிசை முழங்க அனைத்திந்திய மக்களின் துணைத் தலைவர் மேன்மைதங்கிய, பேரறிஞர் திரு. இராதாகிருட்டினனவர்கள் தலைமையில் தொடங்கப்பெற்றது. கிழக்கு நாட்டு மொழிகள், கலைகள், பண்பாடுகள், புதைபொருளாராய்ச்சி முதலிய பல பெரும் பிரிவுகளில் அவ்வத் துறைகளில் கற்றுத் துறைபோய அறிஞர்களால் ஆராயப்பட்ட கருத்துக்கள் வெளியிடப்பெற்றன. மாநாட்டின் தலைவர் திரு. இராதாகிருட்டினனவர்கள் "மேற்கு நாடுகள் யூத, கிறித்தவ, இஸ்லாமிய மதக் கோட்பாடுகளின் கூட்டுறவால் தழைத்தோங்கினவென்றும், அதுபோல கிழக்கு நாடுகட்கு வளம் தந்தவை இந்து பௌத்த மதங்கள்தாமென்றும் கூறினர்". தற்கால உலக மக்களின் தேவைகள் நிறைவெய்த வேண்டுமென்றால் ஒரு குறிப்பிட்ட மதத்தில்தான் உண்மைகளுண்டு என்ற கொள்கை மாறவேண்டும்.

விஞ்ஞானம் காடிடையிட்டும் நாடிடையிட்டும், நீரிடையிட்டும் பரந்து விரிந்துகிடந்த நிலப்பரப்பைச் சுருங்கியது என்று சொல்லும்படிச் செய்துவிட்டது, உலகமே ஒரு குடும்பமாக வாழலாம் என்ற கொள்கை நாளுக்குநாள் வலுவடைகின்றது. அதற்கேற்றாற்போல மக்களுடைய உள்ளங்களும் ஒன்றுபடவேண்டும். இதற்கு மேற்குறிப்பிட்ட அறிஞரின் அறவுரை மிகவும் பொருந்தும். அதாவது "எல்லா மதங்களிலும் உண்மைகளுள்ளன. எல்லா மதங்களையும் ஒன்றோடொன்று கலக்கச்செய்து அதன்மூலம் தோன்றும் புதிய கோட்பாடுகளை மக்களிடையில் திளைக்கச்செய்தால் உலகத்தின் ஒழுக்கம் மேம்படும்".

அண்ணுமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நாராயண சாமி பிள்ளையவர்கள் வரவேற்புரையில் கூறியுள்ள கருத்துக்கள் எல்லா மக்களாலும் வரவேற்கத்தக்கன. பல கலைகளையும், மொழிகளையும், ஆராய்ச்சிகளையும் மாணவர்கட்குப் பயிற்றுவிப்பது பல்கலைக் கழகத்தின் நோக்கமாளுலும், அண்ணுமலைப் பல்கலைக் கழகம் தமிழொடு தொடர்பான கலை, ஆராய்ச்சி இவைகளில் சிறப்பாகத் தொண்டுசெய்யவும், தமிழ் மொழியின் கலை இலக்கியங்களின் மேன்மைகளை உலகுக்கறிவிக்கவும் நிறுவப்பெற்றதென்றும் கூறினர். பல்கலைக் கழகத்தை நிறுவிய, செட்டிநாட்டரசர், பேரறிஞர், திரு. அண்ணுமலைச் செட்டியாருடைய எண்ணம் அதுவாளுலும், அவ்வண்ணம் செயலாற்றும் துணைவேந்தர் மிகச் சிலரே இருந்து வந்தனரென்பதை அறிஞருணர்வர். தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவங்கிடக்கும் இந்நாளில் இவர்போன்ற துணைவேந்தர் இருந்து ஆட்சிசெய்வது தமிழருக்கும் தமிழ் நாட்டுக்கும் பெரும் பயனளிக்கும்.

பொங்கல்.

இயங்குதிணை நிலைத்திணைப் பொருள்களை ஆராய்ந்து பெயரிட்டழைத்த தமிழர் தைத்திங்களின் முதன் மூன்று நாட்களைப் பொங்கல் நாள் என்றழைத்துப் பொங்கி மகிழ்ந்தனர். ஆடிப் பெருக்கில் நீர்பாய்ச்சி, ஆவணியில் களை எடுத்து, புரட்டாசியில் புரந்தந்து. ஐப்பசியில் நீரருந்தி, கார்த்திகையில் காவல்செய்து, மார்கழியில் மகிழ்ச்சியுடன் காத்திருந்த மக்கள் அதற்குரிய பயனைத் தையில் அடைகின்றனர். அந்நாளில் உளத்தே உவகை பொங்குகின்றனர், களத்தே நெல் குவிதலின். மருதநிலத் தெய்வமாகிய வேந்தனை வழிபட்டு, மழைக்கும் வெப்பத்திற்குங் காரணமாகிய கதிரவனைத் தைம்முதல்நாள் மனைதொறும் செந்நெற்கதிரும் தீங்கரும்பும் குலைவாழையும், கொத்து மஞ்சளும் நிறைத்துச் சோறு பொங்கிப் படைத்து மகிழ்ச்சி பொங்குகின்றனர். மறுநாள் இப்பயனுக்குப் பெருந்துணைபுரிந்த ஆனிரைகளையும் ஏறுகளையும் அணிபூட்டிப் பூச்சூட்டி அடிபணிந்து மகிழ்கின்றனர் என்னே இவர்களின் நன்றி. வாழ்விற்குத் துணைபுரியும் விலங்குகளையும் தெய்வங்களாக மதிக்கும் நாடு இது.

(291-ஆம் பக்கம் பார்க்க.)

சென்ற இதழின் தொடர்ச்சி

இலக்கியம் (1)

இரா. இளந்திரையன், B. A. (Hons.)

பிற கலைகளுள் பெரும்பாலானவற்றை நாம் புரிந்து அனுபவிக்க வேண்டுமானால், அக் கலையினைத் தாங்கியுள்ள கருவியையும் (ஓவிய வண்ணங்கள், சிற்பக் கல் முதலியன) நாம் முயன்று தெரிந்து கொண்டிருக்க வேண்டும். இன்றேல் அவற்றை எளிதில் சுவைக்க இயலாது. இதனாலேயே அக் கலைகளின் வளர்ச்சி விரைந்து நடைபெறுவதில்லை.

இயற்கையின் படைப்புக்களிலும் அவற்றின் இயக்கங்களிலும் ஊடுருவி நிற்கும் பெரும் பேரழகு ஒற்றுமையைக் கண்டு அதில் உள்ளத்தைப் பறிகொடுத்தோர் யாரோ ஒரு சிலராகவே இருந்தனர். ஆயினும் நாளடைவில் இவர்களின் தொகையும் வளரலாயிற்று. அவர் தம் படைப்புக்களான கலைகளும் மிகுதியாயின. பார்த்து நடித்தல் மனிதனின் சிறப்பான ஓர் இயல்பு. இவ்வியல்பே கலைஞரின் எண்ணிக்கையை வளர்த்தது என்பது பொய்யன்று. ஒருவன் ஏதாவதொன்றைக் கண்டு, பிறர் வியக்க அதனை வெளியிடுவதைக் கண்டதும், தாமும் அவ்வாறு ஏன் செய்யலாகாது என எண்ணினர். அவர்கள் அந்த முதற் கலைஞ

(290-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இக்கொள்கை தத்துவமாக அமைந்துவிடாமல் உழைப்போர் உள்ளம் பொங்கவேண்டும், அதற்கு மக்களுள் வேற்றுமையகன்று ஒற்றுமை வளரவேண்டும். அதற்கு உண்மையும் ஒழுக்கமும் துணைபுரியவேண்டும். இவைகளுக்குரிய அடிப்படைகளை ஆராய இலக்கியம் பெரியதோர் துணைபுரியும். பண்டைச் சான்றோர்களின் கருத்துக்களும் நடைமுறையும் அறிந்து ஒழுக வாய்ப்பளிக்கும் இலக்கியப் பத்திரிகைகள் வளர்ந்துபொங்க மக்கள் பெரிதும் உதவ வேண்டும். அறிஞர்கள் துணைபுரிதல் வேண்டும். அதனால் அறிவு மட்டுமன்றி, வாணிகம் பொங்கும், தொழில் பொங்கும், உழவு ஓங்கும், இவைகளால் மக்களுக்கு மகிழ்ச்சி பொங்கும், பொழில் அதற்குரிய வகையில் தொண்டாற்றி வளரும். அனைவருக்கும் எம்முடைய பொங்கல் வாழ்த்துக்கள்.

பொழிற்றொண்டர்.

ஐனப் போலவே காணவும், கேட்கவும், உணரவும் முயன்றனர். முதல்வனின் படைப்பும், அப் படைப்புக்குத் துணைநின்ற இயற்கையும் அவர்களுக்கும் துணைபுரிந்தன. அவர்களும் தாம் உணர்ந்தவாறு பொருட்களை வெளியிடலாயினர். கலை ஒன்றேயாயினும் அல்லது கலையின் ஒரு பகுதியிலேயே அவர்கள் முனைந்தாலும், மனநிலை வேறுபாடுகளாலும் சூழ்நிலை வேறுபாடுகளாலும் அக்கலையிலேயே வெவ்வேறு உருவங்கள் அமைந்தன. பல்வகை இலக்கியங்கள் முளைத்தன; பற்பல வகையான ஓவியம் சிற்பங்கள் கிளைத்தன. பிறகலைகளும் இவ்வாறே அமைப்பு முறையில் தமக்குள்ளேயே வேறுபட்ட நிலைகளைக் கொண்டு இயங்கலாயின.

இலக்கியத்தில் இந்த அமைப்புமுறை வேறுபாடுகளையே நடைகள் என்று குறிப்பிடுகின்றோம். அவையே **செய்யுள் நடை, உரைநடை, நாடக நடை, இசைநடை** என்பன. செய்யுள் நடையும் உரை நடையும் இருபெரும் பிரிவுகளாக அமைய, மற்ற இரண்டு நடைகளும் இவ்விரண்டு நடைகளையும் அடிப்படையாகக்கொண்டு வளர்ந்து இயங்கலாயின.

இனி இலக்கியம் என்பது சில நோக்கங்களை வெளியிட அதன் ஆசிரியன் கையாளும் கருவியே என்பர் சிலர். இதுகாறும் வெளிவந்துள்ள சிறந்த இலக்கியங்களையும் இலக்கிய ஆராய்ச்சிகளையும் நோக்க, இக்கூற்று வெறும் பொருளற்ற மொழியாகவே படுகின்றது. சில கருத்துக்களின்மேல் இயங்குமாறு தன் இலக்கியத்தை ஆசிரியன் படைக்கிறான் என்பது இலக்கியத் தோற்றத்திற்கான அடிப்படைக் காரணத்தையே மறுப்பதாக உள்ளது. உலகின் ஒரு பொருளோ, நிகழ்ச்சியோ எந்தவகையில் ஒருவனைக் கவருகின்றதோ அந்த வகையில், அவன் உணர்ந்த முறைப்படியே அதனைச் சொற்களின் துணைகொண்டு வெளியிடுகிறான் இலக்கிய ஆசிரியன். எனவே உணர்ந்ததை உணர்ந்தபடியே ஒருவன் கூறுவதை வெறும் செயற்கைப் படைப்பு என்று எவ்வாறு கூற இயலும்.

அப்படியானால் கலையினால் சில பல நோக்கங்கள் கருத்துக்கள் உலகுக்கு உணர்த்தப்படவில்லையா என்றால், உணர்த்தப்

படுகின்றன. ஆனால் அவை கூறப்படும் பொருளில் அல்லது நிகழ்ச்சியில் இயல்பாக ஊடுருவி நிற்பனவேயல்லாமல் ஆசிரியன் படைத்துக்கூறுவன அல்ல. இருவரிடை மலர்ந்த காதலையும் அதன் வளர்ச்சியையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளாகக் கண்டுணர்ந்து இலக்கியமாக்கும் போது அக்காதல் இடம்பெற்ற சமூகமும் அதற்கு அச்சமூகம் கொடுத்திருந்த இடமும் அவ்விலக்கியம் முழுவதும் ஊடுருவி நின்று கற்போருக்கு வெளிப்படுகின்றது. இது வேண்டுமென்றே ஆசிரியன் நுழைத்துவைத்த கருத்தன்று; அவன் கண்ட வாழ்வில் பின்னிக்கிடந்த பண்பு வாழ்வை எழுதும் அவன் தன்னையுமறியாமல் அக்கருத்தை வலியுறுத்திவிடுகிறான். எனவே இக்கருத்துள்ளீடு அவனால் வேண்டுமென்று செய்யப்பட்டதாகாது.

இனி, உண்மையும் கற்பனையும் இணைந்ததே இலக்கியம் என்பர். கற்பனை என்பது இல்லாத ஒன்றினைப் படைத்துக் கூறுதல் என்றும் கூறுவர்.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்............"

(தொல். அகத். 53)

என்னும் தொல்காப்பியச் சூத்திரப் பகுதியை எடுத்துக்காட்டி, 'உலகில் உள்ளவற்றையும் இல்லாதவற்றையும் இணைத்துக் கூறுவதே இலக்கியம்' என்று கூறுவர் பலர். ஆனால் ஆழ்ந்து எண்ணிப்பார்த்தால் இவர் கூற்றுப் பொய் என்பதும், 'நாடக வழக்கு' என்னும் தொடரே, கூறப்படும் பொருளுக்கும் கூறுவோனுக்கும் ஏற்பட்ட இதயக்கலப்பை வெளியிடுகின்றது என்பதும் தெளிவாகும்.

எந்த இலக்கியத்திலும் உலகோர் பலரும் கண்டுணர்ந்த நிகழ்ச்சிகள் பல வருகின்றன. இவையே உலகியல் வழக்கு — அல்லது உலகோர் இயல்பாக நடப்பனவாகக் கருதிக்கொள்ளுவது. இனி, அவ்விலக்கியத்துள்ளேயே பலரும் காணாதனவும், பலரும் இயல்பானது என்று அறிந்துகொள்ள இயலாதனவுமான சில நிகழ்ச்சிகள் வருகின்றன. இவையே அக்கலைஞன் கண்ட காட்சி. நிகழ்ச்சிகளின் இயல்பான வளர்ச்சியில் தோன்றியும், பிறரால்

காணப்படாதிருக்கின்ற சில இயல்புகளைக் கலைஞன் கண்டு விடுகிறான். அவையே கற்பனை அல்லது நாடக வழக்கு என்று கருதப்படுகின்றன. ஏனெனில் சாதாரணமாக எல்லாராலும் அதைக் காண இயல்வதில்லை. கலைஞன் கண்டு கூறியபின் அதை உணர்ந்து மகிழ முடிகிறது. எனவே மக்கள் அதனைப் புனைந்துரை என்று எண்ணுகின்றனர். இம் மயக்க எண்ணத்தினாலேயே பிற்காலத் தமிழ்ப் புலவோர் இயற்கையல்லாதவற்றை மிகுதியாகக் கையாண்டு, வாழ்வுக்கும் இலக்கியத்துக்கும் உள்ள பிரிக்கமுடியாத தொடர்பைப் பிரிக்கலாயினர். எனினும் நீண்ட பல நூற்றாண்டுகளாக வரும் இலக்கிய மரபில் ஊன்றிய அவர்களால் முழுவதுமாகத் தம் முயற்சியில் வெற்றிகாண இயலவில்லை.

ஒன்றுக்குமேற்பட்ட மனிதர்களின் வாழ்வு ஒன்றாக இணையும்போது எத்தனையோ புதுமைகள் தோன்றுகின்றன. அன்பு, அருள், பண்பு, நாகரிகம் என்பனவற்றின் அடிப்படையில் தோன்றி வளரும் நிகழ்ச்சிகள் கணக்கிலடங்கா. சாதாரண மனிதனே அவ்வப்போது மனிதனின் சாதாரண நிலைக்கு அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த நிலைக்கு மாறிவிடுகிறான். இவற்றையெல்லாம் எல்லாராலும் எப்போதும் கண்டுவிட முடிவதில்லை. அவற்றைக் கண்டு உணர்ந்து வெளியிடும் ஆற்றல் பெற்றவனே கலைஞனாகிறான். எனவேதான் அவன் கண்ட காட்சி, அதை நேரில் தாமே காண இயலாத பிறருக்குப் புனைந்துரையாகக் காட்சியளிக்கின்றது.

வாழ்க்கையின் முக்கியத் திருப்பங்களையும் எல்லாராலும், காண இயலாத இயல்புகளையும் தாங்கியுள்ளதனாலேயே இலக்கியம் முழு வாழ்க்கையாகக் காட்சியளிக்கின்றது. அதனாலேயே அது வாழ்க்கையின் ஆராய்ச்சி என்று கொள்ளப்படுகின்றது. அதனாலேயே அதில் வாழ்வின் அடிப்படை உண்மைகள் சமூக மனப்பான்மை என்னும் வண்ணங்கலந்து காட்சியளிக்கின்றன. அதனாலேதான் அது சில கொள்கைகளின்மேல் அமைக்கப்பட்ட புதிய வாழ்வாகக் காட்சியளிக்கின்றது. அதனாலேதான் இலக்கியம் எல்லாரையும் கவர்ந்து என்றும் வளம்பெற்று வாழ்கின்றது.

சென்ற இதழின் தொடர்ச்சி.

கரந்தைக் கோவை.

[வித்துவான் ச. பாலசுந்தரம்.]

பாங்கி இறைவிக்கவன் குறையுணர்த்தல்.

117 கோல்தாங்கு செந்தமிழ்த் தாங்குங் கரந்தைநங் குன்றிடத்தே
வேல்தாங்கு கையிற் றழைதாங்கி உள்ளம் மெலிவுதரும்
மால்தாங்கி நாளும் வருவரோர் சொல்லும் வழங்கலிலர்
சேல்தாங்கு நல்விழி யாயதற் கென்னும் செயலுளதே ?

இதுவுமது.

நோக்கஞ் சுழன்றுடல் நொந்துளம் வாடியும் நுண்டமிழாற்
பூக்குங் கரந்தையில் நாளும் தழையுடன் போந்தொருவர்
வாக்கும் வடமொழி யாகிநிற் பார்வன வஞ்சிஅவர்
ஏக்கம் புலப்பட வில்லைஎன் செய்வ தியம்புகவே.

இறைவி அறியாள் போன்று குறியாள் கூறல்.

118 தாய்மொழி யாய்த்தமிழ் கொள்வார் பிறமொழி சார்ந்திடினும்
வாய்மொழி வாழ்விவை கொள்வான் கரந்தை வளர்தமிழ்ப்பால்
போய்நுழை வாரவர் போலிந்த புட்கள் புவிமறந்து
சேய்மழை வான்பறந் தாலும் நிலத்திலூண் தேடிடுமே,

பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்.

119 நெட்டியை நீருள் மறைப்பது போறகயல் நேர்விழியாய் !
கிட்டிய என்னிடம் வேறுகிளந்தனை கேட்பவரைத்
தட்டியெ ழுப்புங் கவிவாழ் கரந்தையைச் சார்ந்தொருமான்
குட்டிவி னுவிவந் தாரவர் இன்றுங் குறுகினரே.

---

117. மால்—மயக்கம். வடமொழியாதல்—பேசாதிருத்தல்.
118. பிறமொழியை உயர்த்துக்கூறும் தமிழர்கள் தங்கள் வாழ்வு—உணர்வு மேம்பாட்டிற்குத் தமிழைச் சரண்புகுவர் என்றபடி "வானிடைப் பறந்தாலும் உணவுக்கு மண்ணில் இழிந்து வரும் பறவை என்றதனுல் தலைவி அறியாதவள்போல் பேசினும் தலைவனையே விரும்புகின்ருள்" என்பதைக் குறிப்பித்தாளாம் .119. நெட்டி—தக்கை.

தலைவி பாங்கியை மறைத்தல்.

120 விருந்தாக வும்வேரி கொள்ளவும் வேட்டை விருப்புடனும்
வருந்தாம லிப்புனம் பல்லோர் வருவர் மடமை தவிர்
மருந்தாகும் வண்டமிழ் வாழ்வாங் கரந்தை வரையுறைவாய்
இருந்தாலும் இவ்வுரை நம்மவர்க் கென்றும் இயல்பல்லவே.

பாங்கி என்னை மறைப்பதென்னெனத் தழாஅல்.

121 கையை மறைத்தெழு துங்கவி யுண்டோ கரந்தையில்நீர்ச்
செய்யை மறைத்தெழும் செங்கரும் புண்டோ ? திருவனையாய்
பொய்யை உரைத்தெனை நீமறைத் தாலுண்மை போன்றிடுமோ?
மெய்யை இரண்டெனக் கொண்டதல் லாலுளம் வேறிலையே.

பாங்கி கையுறை புகழ்தல்.

122 மருவோ டலர்மலர் மாந்தழை யாவும் மகிழ்ந்தணியப்
பொருளோ டுவமையிங் கொன்ருய்ப் பொலியும் புதுமையினை
இருளோ டெதிர்குழ லாயின்று காணுதற் கெண்ணுகின்றேன்
அருளோ டொளிர்தமிழ் ஆளும் கரந்தையெம் ஆரணங்கே.

இதுவுமது.

நெஞ்சுருக் குந்திரு வாசகத் தேனை நிதம்பருகி
மஞ்சுருக் கென்னநன் மாணவர் பால்பொழி மாண்கரந்தைப்
பிஞ்சிருக் கும்பெரு மாந்தழை யாமிதைப் பேணியணி
பஞ்சிருக் கும்பதத் தாயழ கேறுதல் பார்ப்பதற்கே.

கிழவோன் துயர்நிலை கிளத்தல்.

123 அஞ்சா றெழுத்தா லகிலத் திலங்கும் அருங்கருத்தை
எஞ்சா துரைக்குந் தமிழ்சேர் கரந்தை இரும்புனத்தில்
மஞ்சா லுவக்கும் மயிற்பேடை யோடு மகிழ,அவர்
நஞ்சார்ந் தவரென நங்காய்! மெலிந்துளம் நைகுவரே.

மறுத்தற் கருமை மாட்டல்.

124 கற்பனை யற்றவர் காவியம் போலவக் காவினிடை
பொற்புறு பூந்தழை வற்றின யானுமென் பொய்வறந்தேன்
கற்புறு வார்க்கமிழ் தாந்தமிழ் காக்கும் கரந்தைவரை
நிற்புற வஞ்சினன் நேர்ந்திளைப் பார்க்கென் நிகழ்த்துவதே?

---

120. வேரி—தேன். இருந்தாலும்—எவ்வளவு உரிமை இருப்பினும் என்றபடி. நம்மவர்—மலைவாணர். *121.* செய்—வயல். மெய்—உடம்பு. *122.* மரு—மணம், பொருள்—உவமேயம். மஞ்சுருக்கு—மழை. பதம்—பாதம். ஏறுதல்—விளங்குதல். *123.* அஞ்சாறு—முப்பது. மஞ்சு—கார்மேகம். ஆர்தல்—உண்ணுதல். *124.* பொய்வறந்தேன்—இனிமேல் கூறுதற்குப் பொய் இல்லை என்பது.

தலைமகன் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்.

125 விரும்பின போதெளி தாகுங் கரந்தை வியன்வரைவேள்
இரும்பனை யாருளம் என்பால் இரங்குதல் இல்லையெனில்
கரும்பனை யாரிடம் செல்வேன் அவரென் கருத்தினுக்குப்
பெரும்புணை யாவரென் பார்பொருள் தேறலன் பெண்ணணங்கே

பாங்கி தலைவியை முனிதல்.

126 தோயத் தமிழ்மணம் வீசுங் கரந்தையில் தோகையன்னாய்!
நேயத் தவரெனும் பேதைமை யாலே நிகழ்த்தியவென்
மாயப் புரைமொழி மன்னித் தருள்க மனங்கவர்ந்த
ஆயத் தவரிட மேயுரைப் பாயுனக் காவனவே.

தலைவி பாங்கியை முனிதல்.

127 பேசா மொழிக்கியல் பேசிய தாற்சிலர் பேதைமையால்
ஆசாக ஆரியம் ஐயிரண் டாவி அளித்ததெனக்
கூசா துரைப்பது போலாங் கரந்தைநங் கோமகனை
ஆசாக இவ்வடி யாள்நமக் கிங்கே அறிவிப்பதே.

தலைவி கையுறை ஏற்றல்.

128 தேடும் புதுமையெ லாந்தரும் தீந்தமிழ் சேர்கரந்தை
நீடும் தலைவரின் நெஞ்சங் களிப்பவும் நேயமிக
ஊடும் நினக்குவப் பாகவும் நானிங் கொளிபெறவும்
வாடும் இவைதரு மேற்றரு வாய்தழை மாமருந்தே.

இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்.

129 பிழையொன் றிலாத்தமிழ் பேசுங்கரந்தையிற் பெய்வளையாள்
உழைசென் றியற்பெயர் ஓதவும் செய்யேன் ஒளிவளரும்
தழையென் றுரைத்தனன் தாய்தன் மகவைத் தழுவுதல்போல்
விழையொன் றுடல்தழைத் தாளணைத் தாளென் வியப்பிதுவே?

பாங்கி தலைவற்குக் குறியிடங் கூறல்.

130 தெய்வத் தமிழ்க்கரந் தைவரும் தென்றல் சிவிறியிட
நெய்தொத் தலர்தாது சந்தனம் நேர்ந்திட நீளரவம்
பெய்வித்த மாமணி நல்விளக் காமிப் பெருவனத்தைச்
செய்வித்த பாவையன் னார்பகல் ஆடிடத் தேர்குவரே.

---

125. இரும்பு அனையார் கரும் பனையார்—கரிய பனைமரம். 127. பேசா மொழி—சமக்கிருதம். இயல்பேசியது - வடமொழியாக்கம் தமிழில் செய்தது. ஐயிரண்டாவி. எ. ஒ, நீங்கிய பத்து. ஆசாக—பற்றுக்கோடாக. 128. நீடும்—நின்றேங்கும். 129. விழை—விருப்பம். 130. சிவிறி—ஆலவட்டம் (விசிறி) நெய்—தேன். தொத்துதல்—தங்கியிருத்தல்.

பாங்கி குறியிடத் திறைவியைக் கொண்டுசேறல்.

131 ஒன்றே இறையென ஓதுந் தமிழ்பயில் ஒண்கரந்தை
நின்றே விளங்கி நிழல்செயும் பூம்பொழில் நேயமிகச்
சென்றே மகிழ்திளைத் தேவிளை யாடுவம் செம்பவளத்
தின்றே னிறைக்கும் எழிலே! எழுகவிங் கென்னுடனே.

இதுவுமது.

சத்தியம் போற்றும் ஆ.யா.அரு ளானந்த சாமிஎனும்
முத்தமிழ் வள்ளல் தொண் டேற்குங் கரந்தை முதற்புலவர்
பத்திமை யால்வளர்க் குந்தமிழ் போலும் பசும்பொழில்வாய்
கொத்தும லர்ப்பறித் தாடுகம் போதுக கோல்வளையே.

குறியிடத் துய்த்து நீங்கல்.

132 வழிமொழி வார்க்கருள் பெய்யுங் கரந்தை வனத்திடையே
விழிமொழி சாயலுக் காற்ரு அளிகுயில் மென்மயில்கள்
பழிமொழி பேசவச் சூர்மகள் நீவரப் பார்க்குமதால்
பொழிலுழை நிற்கயான் போய்வரு காறுமென் பூங்கொடியே,

இறைவி இறையோனிடத் தெதிர்ப்படுதல்.

133 தேங்கமழ் சீர்கரந் தைத்தலத் திந்தச் செழும்பொழிலுள்
வீங்கிரு ளின்றிவிண் மீனின்றி வெய்யோன் விளங்குபகல்
ஏங்குபொன் நூபுரம் பூண்கொடி மீமிசை ஏர்மதிபூத்(து)
ஈங்குந டைபயின் றேகும் புதுமையை என்சொல்வனே

இதுவுமது.

கருப்பொரு டானமயங் குந்திணைக் குள்ளெனக் காட்டுதற்கு
நெருப்புரு காந்தள்நன் முல்லைசெந் தாமரை நெய்தல்கலந்
துருப்பெறு பூங்கரும் பென்முனர்ப் பெண்போல் ஒசிந்துவரும்
விருப்புறு செந்தமிழ் மேவும் கரந்தை வியன்புனத்தே.

புணர்ச்சி மகிழ்தல்,

134 காவுள் இருந்தமிழ்க் காரிகை போற்றிக் கரந்தையர்சொல்
பாவுள் அளபெடைக் கேபொருள் தேறினன் பாவையுறு
நாவுள் அமுதமென் பாருரை நாடினன் நானிலத்தில்
தேவுள் உமையொரு பாகனின் சீர்த்தி தெரிந்தனனே.

---

131. செம்பவளம் — வாய். *132.* வழிமொழிதல்—வாழ்த்துதல். பழிமொழிபேச—சூர்மகளிடம் கோள்சொல்ல. நீவரப் பார்க்கும்—வஞ்சம் தீர்க்க எண்ணிப் பார்க்கும், அதனால். *133.* ஏங்கும்—ஒலிக்கும். நூபுரம்—சிலம்பு. *134.* அளபெடை வடிவம் இரண்டாயினும் எழுத்து ஒன்றாக மூன்று மாத்திரையளவாக எண்ணப்படும் — அசைஇரண்டாகும். பாவை — செய்யுளை, பெண்ணை மறுபொருள்.

புகழ்தல்.

135 வல்லார் கரந்தையில் வாழ்சுரும் பீர்!இந்த மாநிலத்தில்
எல்லாக் கவினும் எழுந்துவந் தாலுமிவ் ஏந்திழைமுன்
நில்லா, உரைநிகழ்த் தா,வோ ரமையம் நிகழ்த்திடினும்
புல்லா எனைப்பொழி யாவருள், உள்ளம் புகலரிதே.

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

136 தீவிய செந்தமிழ்த் தேரும் கரந்தைத் திகழ்புலவர்
காவிய மாய்க்கவி யாயுரை யாயருட் காட்சியுடன்
ஆவிய ளித்தெனை யாளமிழ் தே! யுன தாயமுனைக்
கூவிய ழைக்குமுன் சென்றே அவரிடைக் கூடுகவே.

பாங்கி தலைவியைச் சார்ந்து கையுறை காட்டல்.

137 புத்தம் புதியநற் பாவகை நாளும் புவிசிறப்ப
வித்துங் கரந்தையின் மானே நகைக்குமிவ் வேல்விழிக்கும்
முத்துங் கயலும் மறைந்தன நாணிநீர்; முல்லைமலர்க்
கொத்துங் குவளையும் கொண்டு வந்தேனிவை கொள்ளுகவே.

பாங்கி தலைவியைப் பாங்கிற் கூட்டல்.

138 சிறிதாய் முயலப் பெரும்பயன் சேர்த்திடும் செந்தமிழை
நறிதாய் வளர்ப்பவர் நச்சுங் கரந்தையை நண்ணியயல்
கறிதாய் வளர்மலை கூய்சுனை ஆடுறுங் காரிகையர்
பிறிதாய் நினைக்குமுன் னேவிரைந் தேகுக பெய்வளையே

பாங்கி தலைவற்கோம்படை சாற்றல்.

139 அன்னை யிலாத்தமிழ் ஆளுங் கரந்தை அருட்டலைவ!
உன்னை ஒருவரம் வேண்டுதும் வானம் உறையமுதம்
தன்னை மறப்பினும் காதற் றலைவியைத் தான்மறவேல்
என்னை மறப்பினும் யானிடை நின்றதை எண்ணுகவே.

உலகியல் மேம்பட விருந்து விலக்கல்.

140 வெங்கதிர் மேற்றிசை மேவினன் ஆதலின் வெற்ப! இனி
எங்களின் நல்விருந் தாகிநல் லான்பால் இனிதளைந்து
பொங்கிய சோறும் புளிங்கறி யாவும் புசித்தமிழ்தம்
தங்கிய சீர்கரந் தைத்தலத் தெம்மனைத் தங்குகவே.

---

136. தீவிய — இனிய. தேரும்–ஆராயும்.
137. வித்துதல்—உண்டாக்குதல்—நீரில் நாணி மறைந்தன என்க.
138. கறி—மிளகுக்கொடி. மலை கூவுதல்—எதிரொலி காணுதல்.
139. வானம் உறையமுதம் — மழை.

விருந்திறை விரும்பல்.

141 பருந்தாரும் வேல்விழிப் பாவாய்! கரந்தையிற் பைந்தமிழ்போல்
அருந்தா அமுதனை யீர்! உங்கள் கையால் அளிக்குமவை
மருந்தா யினுமமிழ் தாகும் எனக்குநும் மாமனையில்
விருந்தா யமருநற் பேறின்று வாய்த்ததென் மேற்றவமே.

11. ஒருசார் பகற்குறி.

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் போதுகண்டிரங்கல்.

142 உய்வைத் தருநற் கரந்தைத் தமிழ்ச்சங்கத் தோதுகின்ற
தெய்வப் புலவன் திருவள்ளு வன்செய் திருக்குறளின்
மெய்வைத் திடாதவர் சிந்தையைப் போலவெய் யோன்மறைய
நய்வைத் தரவிருள் மாலையம் போதிவண் நண்ணியதே.

பாங்கி புலம்பல்.

143 ஆக்கந் தருந்தமிழ் ஆளுங் கரந்தை அணிவரைமேல்
பூக்கும் மதியெனப் புன்மாலை தூதாய்ப் புகத்தலைவன்
ஏக்கங் கொடுத்தகன் றுனெங்கள் ஏந்திழை இன்றிரவு
தூக்கங் கெடுவள் சுடரோன் இனியென்று தோன்றிடுமே?

தலைவன் நீடத்தலைவி வருந்தல்.

144 எனைவிட்டு முன்செலும் ஏழைநெஞ் சே!யிரு; இன்றமிழ்த்தேன்
நனைவிட் டலர்கரந் தைப்பொழில் நென்னல் நயந்தவர்க்குத்
தினைமட் டுமேனும் தெரியுமோ உன்னைச்? சிறையளிகாள்!
மனைவிட்டு மாலையம் போதும் வராததென் மன்னவரே?

தலைவியைப் பாங்கி கழறல்.

145 நிதியோ டிசைதர நீடும் கரந்தையில் நேர்தமிழ்நூல்
விதியோ டெதிர்மறை மேவுதல் காணினிம் மேதினியில்
வதிவோர் இயற்கை செறிவும் பிரிவுமே வஞ்சியிதை
மதியா தவர்பிரிந் தாரென வாடுதல் மாண்பிலதே.

---

141. மேற்றவம்—முன் பிறப்பின் நல்வினை. 142. மெய் வைத்தல்—பொருளை அறிந்தொழுகுதல். வெய்யோன்—கதிரவன். நய்வு—துன்பம். 143. புன்மாலை—பொலிவழியச் செய்து மயக்கத்தைத் தரும் மாலைக்காலம். தூக்கம் கெடுவள்—பிரிவுத் துன்பத்தால் உறங்காள். 144 நனை—மொட்டு. விட்டு—மணம் வீசி. நென்னல்—நேற்று, தினை—சிறிய அளவு. 145. விதி—உடன்பாடு—பிரிவு இயற்கை என்றபடி.

(தொடரும்)

கவிதை

ந. செகதீசன்

அவ்வாறே பாட்டிற்கும் வடிவு மட்டும் முழுமையை நல்காது. பாட்டிற்குரிய பண்பும் உயிரும் பாங்காய் அமையப் பெற்றதே பாட்டாகும். பாட்டின் பண்பு அவற்றில் படிந்தாடும் கற்பனையாம். அதனூடொளிரும் உயிர், உண்மை தோய்ந்த உணர்ச்சிச் செல்வமாகும். கவினுரும் கற்பனையும், கருத்தள்ளும் உணர்ச்சியும் நிறைந்த கலையே நிவந்துயர்ந்த கவிதைக் கலையாம்.

ஈண்டதனைக் காட்டொன்றால் காண்பாம்.

> ‘ தாரத்துட் டோன்று முழையுழையுட் டோன்று
> மோருங் குரல்குரலி னுட்டோன்றிச் — சேருமிளி
> யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
> கைங்கிளை தோன்றும் பிறப்பு — இஃதோர் வெண்பா.

இதனுட் பாட்டின் பண்பாகிய கற்பனையோ, உயிராகிய உணர்ச்சியோ இல்லை. இதனுள் நாம் நோக்கத்தக்க உண்மை அழகு பெறுமல் காணப்படுகின்றது. இதனைப் பயிலும் நமக்கு எழுச்சியோ இன்பமோ தோன்றுவதில்லை. ‘ பாக்காவது கமுகம் பழம், பருப்பாவது துவரை ’ என்ற பாடலைப் படிப்பதுபோன்ற உணர்வே தோன்றுகின்றது ! அதே வடிவில் இன்னொரு பாடலைப் பார்மின் !

> ‘ காவியுகுநீரும் கையிற் றனிச்சிலம்பும்
> ஆவி குடிபோன அவ்வடிவும் — பாவியேன்
> காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
> கூடலான் கூடாயினான் ’

கூடல் நகர் வேந்தன் கோவலனைக் கொலை செய்தான் ! அழுத கண்ணும் அஞ்சா நெஞ்சும் கொண்ட பெண்ணரசி கண்ணகி பாண்டியன் அவையை நண்ணினாள்.

நீர்பொழியும் காவிமலர்க்கண்ணையும், ஒற்றைச் சிலம்பேந்திய கையையும், ஆவி குடிபோன வடிவையும், உடலெல்லாம்

மூடிமறைத்த கருங்குழலையும் கண்டான் கூடல்வேந்தன்— கண்டவுடன் கூடாயினன்! அதுவரையும் பாமாலையும் பூமாலையும் தாங்கிவந்த பாண்டியன், வெறுங் கூடலாது முரசு முழங்குதானை யோடு அரசோச்சிய பீடுகெழுகுரிசல் கண்ணகியைக் கண்ட வுடன் சொற்சோர்ந்து வெற்றுடலாய் வீழ்ந்தான்!

இப்பாடல் உணர்ச்சியின் உறைவிடமாய், எழுச்சியின் இருப்பிடமாய் அமைகின்றது. முன்னர்க் காட்டிய பாடலின் வடிவும் இதன் வடிவும் ஒன்றே! வடிவத்தால் வேறுபாடில்லை. வடித்தளிக்கும் உணர்ச்சியால், அழகால், பின்னதுமுன்னதைப் புறக்கிட்டோடச் செய்கின்றது. எனவே இதனைப் பாட்டென் கின்றோம். முன்னதோ சொல் தாங்கி நிற்குமொரு சொற்பந்த ராகக் காட்சியளிக்கின்றது. கவிதைதான் பொருளை அழகாகவும் அழுத்தமாகவும் எடுத்துரைத்துப் பயில்வோருள்ளம் அதில் தோயும் வண்ணமும் அமைந்த ஆற்றல்வாய்ந்த கருவியென்ற கருத்து முன்னர்க்காட்டப்பட்ட பாட்டால் நிறுவப்படுகின்றது (Poetry is simply the most beautiful impressive and widely effective mode of saying things and hence its importance.) —Arnold

இரண்டு மின்கலங்கள் வடிவால் வேறுபாடற்றவை. ஒன்றை விளக்கில் பொருத்தினுல் ஒளி அலைபாய்ந்து கிளம்புகின்றது. மற்றதை விளக்கில் பொருத்தினுல் ஒளி தோன்றுவதில்லை. முன்னது மின்னுற்றல்வாய்ந்த மின்கலம். பின்னது அஃதற்ற மின்கலம். மின்னுற்றல்வாய்ந்த மின்கலம் உணர்ச்சி கற்பனைச் செல்வம், உயர்ந்த அழகு ஆகியவற்றைக்கொண்ட பாட்டாகும். மின்னுற்றலற்ற வடிவால் வேறுபாடற்ற மின்கலம் செய்யுள் எனலாம்.

இவ் வேறுபாட்டைக் கருதியே மேலைநாட்டாரும் பாட்டை (Poetry) என்றும் செய்யுளை (Verse) என்றும் பெயரிட்டழைப் பாராயினர். இவ்விரண்டு பகுதியும் எந்நாட்டினிலக்கியத்திலும் விரவியே காணப்படுகின்றன.

இத்தகைய ஆற்றல் வாய்ந்த கவிதைக் கலை இலக்கியத்திற் குயிர் நாடியாக வமைந்து மொழிக்கு மெருகும் அழகும் பெருகச்

செய்கின்றது. உலகின் எந்த நாட்டிலும் இலக்கியத்தின் குழவிப் பருவத்தில் இயற்றப்பட்டவனைத்தும் கவிதை வடிவையே கொண்டனவென்று அறிஞர்கள் கூறுவர். கருத்தளவில் இருப்பவற்றை உணர்ச்சியுடன் வெளியிடும் இக் கவிதைக் கலையின் பயன், கவிஞர்கள் எடுத்துக்கொண்ட பொருளுக் கேற்ப வமையும். அறமுரைப்பன, அகத்திற்கின்பமளிப்பன, என்றவாறு பல பிரிவுகளைக் கொண்டிலங்கும். இத்தகைய கவிதைகளை அழகு செய்வன அதன் அமைப்பு, கூறும் பொருள், உணர்ச்சி, அழகு, கற்பனை என்பனவாம். கவிதையின் கண்ணெனுளிரும் இதயத்திற் கின்பம் பயக்கும் கற்பனை, பொருளை விளக்குவதோடு அதற் கழகு ஏற்றும் உவமை, இவற்றை யெல்லாம் வடித்தெடுக்கும் சொல், பொருள் ஆகியவற்றின் நலங்கள் தனித்தனியே ஆய்ந் தறிந்து இன்புறத் தக்கன.

இவ்வாறு வளம்பலசான்ற கவிதைகள் உள்ளத்திற்கு உவப்பையும், உணர்வையும், உறுதியையும் அள்ளியள்ளி வீசுவனவாம். ஏனைய மொழிகள் பெற்றிருக்கின்ற இலக்கிய இலக்கண வளத்தில் எவ்வகையிலும் குறைவு இன்றி, ஒப்புயர்வற்று விளங்கும் நம் உயர்தனிச் செம்மொழியாஞ் செந்தமிழ்மொழி கவிதைக் கலையில் உலகிற்கே வழிகாட்டும் தலைமை சான்றதாம்.

இத் தீந்தமிழ்ப் பொய்கையுள் சீர்த்த புகழுடன் பூத்தொளிரும் கவிதை மலர் அளிக்கும் கரையில்லா நலங்களைப் பைந்தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் பயின்று பயனுற்று அதன் புகழைப் பாரெல்லாம் சீராகப் பரப்பும் நாளே தெருவெல்லாம் தமிழ் முழக்கமும், வீடெல்லாம் கலை விளக்கமும் பொங்கி யொளிரும் பொன்னுளாகும். அத் திருநாள் வல்லே வருவதாக !

சென்ற இதழின் தொடர்ச்சி.

தையற் றொழில்

வித்துவான் த. பொ. தண்டபாணி, B. A.,

இனி **"மானின் உரிவை தைஇய"** என்ற சொற்றொடரைப் பார்த்தால் அக்காலத்திலும் இப்போது நாம் பல்வேறு விலங்குகளின் உரிவை (போர்வை) யினைத்தைத்து ஆசனமாகவும், போர்வையாகவும், உடுப்புக்களாகவும் அணிந்து மகிழ்வதைப் போன்று, நமது மூதாதையர்கள் மான் முதலியவற்றின் உரிவையினைத் தைத்து அணிந்திருக்கவேண்டும் என்று புலப்படுகிறது. எனவே தையற்றொழிலில் இன வேறுபாடு அன்றும், இன்றும், என்றும் நுழைதற்கில்லை.

கலிங்கத்துப்பரணியில், நமது நாட்டுப் பழைய மன்னர்களும் போர்வீரர்களும் யானைகளைப் போர்க்களத்துக்கு எடுத்துச் சென்று கடும்போர் புரிந்திருக்கின்றனர். குதிரைகளும் ஒட்டகங்களும் போரில் கலந்துகொண்ட செய்தியை சுமார் 2000 ஆண்டுகளுக்கு முந்திய இந்திய சரித்திரத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். அவ்வாறாயின், யானைகளின்மீது உட்கார்ந்து செல்வதற்காக "தையல் வேலைப்பாடு" மிகவும்கொண்ட படுதாக்களை அமைத்திருக்கவேண்டும் என்றும் புலனாகிறது.

நிற்க, மணிமேகலையில் மலர் வனம் புக்க காதையில் அடி 32–33ஐக் கவனிப்போமாக. அவை :—

> " **சித்திரச் செய்கைப் படாம்** போர்த்ததுவே
> ஒப்பத் தோன்றிய உவவனம் தன்னை " என்ப.

இதில் " சித்திரச் செய்கைப் படாம்" என்ற சொற்றொடருக்குச் "சித்திர வேலை செய்யப்பட்ட ஆடை" என்ற பொருள் கிடைக்கிறது. ஆடையில் சித்திர வேலை எப்படிச்செய்யமுடியும்? தையல் தொழிலாலன்றி மற்றெதுவாலும் முடியாதென்க. (Embroidery) என்று ஆங்கிலத்தில் பேசப்படும் கைத்தொழில்

எல்லாம் நூலும் ஊசியுங்கொண்டே இழைத்தாகவேண்டும் எனவே தையல் தொழிலின் சிறப்பினை நமது முன்னோர்கள் பல்வேறு துறைகளிலும் அறிந்திருந்தமை தெற்றெனப் புலப்படு கின்றதன்றோ? ஆம் என்க.

மற்றொரு உதாரணமும் மணிமேகலையில் கிடைக்கிறது. விழா வறை காதையில் அடி—20-ல், "கதலிகைக் கொடியும் காழ் ஊன்று விநோதமும்" என்று வருகிறது. அதில் "கதலிகைக் கொடி" என்பதற்குப் "பலவகையாகக் கத்தரிக்கப்பட்ட துகிற் கொடி" என்பது பொருள். துணியை பலவகையாகக் கத்தரித் தால் அவற்றை தைக்காமல் அவை எப்படி கொடிகளாக அமை யும்? எனவே அங்கேயும் கத்தரிக்கோலைப் பெரிதும் உபயோ கப்படுத்தும் தையற் றொழிலின் சிறப்பே தொனிக்கிறது. மேலும் அவ்வடியில் வரும் மற்றொரு சொல்லான "விநோதம்" என்பதற்குப் "பல்வகை வண்ணந் தீட்டிய துகிற் கொடிகள்" என்பது பொருள். பல்வேறு வண்ணங்கள் தீட்டிய துகிலினை கொடிகளாக அமைக்கவேண்டின் அவற்றை தையலினாற்றான் இணைக்கவேண்டும். எனவே சித்திர வேலைப்பாட்டுடனும் வண்ண வேலைப்பாட்டுடனும் கூடிய கொடிகளைத் தைத்து வெற்றி விழாக்களையும் பிறவற்றையும் நம் முன்னோர்கள் கொண் டாடினர் என்பது வெள்ளிடை மலையாம்.

இனி, சிலப்பதிகாரத்தில் புகுவோம். அங்கு கடலாடு காதையில் அடி. 39-ல், "இடையிடை மீன்வலை பகர்வோர் விளக்கமும்" எனப் பரதவர்களின் வலையைப்பற்றிய செய்தி கிடைக்கிறது. அப் பரதவர்கள் தங்கள் வலைகளை தைக்குந் திறனை நாம் நேரில் கண்டுளோம். ஆதலின் அவர்கள் அத் தொழிலை எந்த நாட்டுக்குஞ் சென்று கற்றுக்கொண்டு திரும்பி யிருக்க மாட்டார்கள். மேலும் அந்நூலில் வேனிற் காதையில் அடி. 38 முதல் 48 வரை எண்வகைப்பட்ட நடிப்புக்களை விவர மாக விளக்கியுள்ளார்கள். அதன் முன்னர் வருகின்ற கடலாடு காதையில் சிவன் ஆடியதாகக் கூறப்படும் எண்வகைக் கூத்துக் களை அடி. 9 முதல் 19 வரை நாம் கண்ணுறுகின்றோம். அவை களுக்குரிய ஆடைகள் அளவாகத் தைக்கப்பட்டிருக்க வேண்டு மன்றோ.

இனி ஆங்கிலேயர் The "Tailor and Cutter" என்ற தையல் சம்பந்தமான வார இதழை வெளியிடுவதுபோல நமது தமிழ் நாட்டுத் தையற் றொழிலாளர்கள் தமிழில் வெளியிடாக் குறை ஒருபக்கம் இருப்பினும், அவ்வாறு ஓர் வார / மாத இதழ் வரத் தொடங்குமானால் மேற்கண்ட ஆங்கிலப் பத்திரிகையின் செல்வாக்கு அறவே தமிழ் நாட்டை விட்டகலும் என்று என்னால் உறுதியாகக் கூறமுடியும். அவர்கள் இன்னும் "Illustrated book of Tartans" என்றும் "The hand bcok of Fashion" என்றும் "The Military Style & clothes" என்றும் பல்வேறு நூல்களை வெளியிட்டுள்ளனர். அவையனைத்தும் காலத்தாற் கணுழி நூறு அல்லது இருநூறு ஆண்டுகளே ஆனவை. ஆதலின் நமது பண்பாட்டில் ஊறி வளர்ந்து வருகின்றதும், நமது முன்னோர்களால் நன்கு போற்றப்பட்டுப் பாதுகாக்கப்பட்டதுமான தையலறிவை, நோய்தரும் மேற்றிசைக் காற்றின் வழிநோக்கி அடிமையை ஓம்பி வாழும் அன்னியர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் அடிமைப்படுத்தாதிருப்போமாக.

Mr. A. A. Whife, Mr. Pludge, Miss. Angela Field ஆய இவர்களும் இவர்கள் ஒத்த பலரும் தையலறிவை நன்கு பெற்று விளங்கும் மேனாட்டு மேதைகள் என்பதை நான் மறுக்கவில்லை. அவர்களால் ஆற்றப்படும் தையற்றொண்டின் சிறப்பையும் அதன் பயனைய் இக்கால மக்கள்—மன்னன் முதல் இரப்போர் வரை—பெற்று அநுபவிக்கும் நவநாகரிக உடைகளின் வேலைப்பாட்டினையும் அடியேன் போற்றத் தயங்கேன். அதே சமயத்தில் நமது தமிழ் நாட்டில் தையலறிவிற் சிறந்த பழம் பெருங்குடி மக்களின் பெயர்களுள் சிலவேனும் இவண் கூற என்னால் முடியவில்லையே என்று ஏங்குவேன். இருப்பினும், தையலறிவும் தொழிலும் நமக்கே உரியவை என்பதை மறக்கவேண்டாமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சென்ற இதழின் தொடர்ச்சி.

பண்பு.

சிவா.

சந்திரா! வந்து நெடுநேரமாயிற்ரு? என்று பேச்சை ஆரம்பித்தார்.

இல்லையம்மா! இப்பொழுதுதான் வந்தேன். என்றேன் நான். அப்பொழுதுதான் முதன்முதலாகப் பொய் சொன்னதாக எனக்குப்பட்டது. நெஞ்சம் வருந்தினேன். இருந்த போதிலும் இப்பொய் சொன்னதால் யாருக்கும் கெடுதியோ அல்லது இழப்போ ஒன்றும் நேரவில்லை, அந்தமட்டில் நல்லது என்று தோன்றவே, அலையும் மனத்தை அமைதிப்படுத்தினேன்.

ஏனம்மா! கோயிலுக்குச் சென்று பக்தி வெள்ளத்தில் உங்களையே மறந்துவிட்டீர்களா? என்று மீண்டும் ஆரம்பித்தேன்.

இன்று நமது கோவிலில் முருகனைப் பார்ப்பதற்கு ஆயிரம் கண்கள் வேண்டும் தம்பி! அவ்வளவு அழகாக அலங்கரித்திருந் தார்கள். அதைப் பார்த்துக்கொண்டே நின்றதில் நேரம் போனதே தெரியவில்லை. நீயும் வீடு செல்லும்போது அங்கு சென்று பார்த்துப்போ என்ருர் அம்மா.

அப்படியே ஆகட்டும் அம்மா! சிற்பியின் கற்பனையிலே உருவான சிலைக்கு அணிகள் பூட்டி அழகு பார்க்கும்போது வருகின்ற மகிழ்ச்சியைவிட, மனிதனுள்ளே மறைந்து கிடக்கும் தெய்வத் தன்மையை உணரும்போது பெறுகின்ற இன்பத்தையே என் நெஞ்சம் பெரிதும் விரும்புகிறது.

என்ன தம்பி! அப்படியானுல் உனக்குக் கடவுள் நம்பிக்கை.........

நிறைய உண்டு.

மனிதனும் தெய்வமும் ஒன்றுதானு சந்திரா!

ஒவ்வொருவரிடத்திலும் அருள் மனம், அரக்கமனம் என்ற இருவகை மனங்கள் உள்ளன. அருள் மனம் எப்போதும் நல்லதையே நாடுகின்றது. அரக்க மனம் அதைச் செயலாற்ற முடியாதபடி தடுக்கிறது. இரு மனங்களும் போரிடுகின்றன. அவைகளின் வெற்றி தோல்வியைப்பற்றி உறுதியாகக் கூற முடியாது. சூழல்களுக்கேற்ப அவை அமையும். உள்ளப் போராட்டத்தில் அருள் மனத்தின் நிலைத்த பெரும் வெற்றியில்தான் தெய்வத் தன்மை ஒளிந்துகொண்டிருக்கின்றது. உலகியற் போக்கில் பெரும்பாலும் அருள் மனத்தின் வெற்றியைக் காண்பது அருமை அம்மா!

என்னமோ தம்பி! நீ சொல்லுவதை என்னல் புரிந்து கொள்ள முடியவில்லை.

அம்மா! அடிப்படை எண்ணங்கள் நம்மிருவருக்கும் ஒன்றுதான். ஆனல் கொள்ளுகின்ற முறை, செல்லுகின்ற பாதை இவைகளில்தான் நாம் மாறுபடுகிறோம். இந்நேரத்தில், உலகப் பெருங்கவிஞர்களுள் ஒருவரான தாகூர் சொன்னவை என் நினைவிற்கு வருகின்றன:— "செபமாலை உருட்டுவதை விட்டுவிடு. மந்திரமும் தந்திரமும், ஆடலும் பாடலும், ஆண்டவனைக் காட்டமாட்டா. தாழிட்ட, அடைபட்ட, இருண்ட மூலையில் நீ எவரை வழிபடுகின்றாய்? உன் கண்களைத் திறந்து உன் கடவுள் உன்முன் இல்லை என்பதைத் தெரிந்துகொள்".

சரி சரி, நீங்கள் மெத்தப் படித்தவர்கள். அதிகமாக அறிந்தவர்கள். உங்கள் கருத்து உங்களுக்கு! அம்மா அவை எல்லாம் ஏதும் அறியார்கள், ஆகவே அவர்கள் எண்ணம் அவர்களுக்கு! இதற்காக ஏன் வீணே வாதிடவேண்டும்? என்று இடைமறித்தாள் அல்லி.

அல்லி! சொற்போர் செய்யவில்லை. அதற்கேற்ற இடமும் இதுவன்று. என் கருத்தை எடுத்துச் சொன்னேன் அவ்வளவுதான்! என்று சொல்லித் திரும்பினேன். அம்மா அங்கே சோர்வாக அமர்ந்திருப்பதைக் கண்டேன்.

ஏனம்மா, சோர்ந்து காணப்படுகின்றீர்கள்? என்று கேட்டேன்.

'தம்பி! எனக்கிருப்பதெல்லாம் ஒரே ஒரு கவலை. அல்லியை எங்காவது ஒரு நல்ல இடமாகப் பார்த்துக் கலியாணம் செய்து கொடுத்துவிட்டால் நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன். என்று ஆரம்பித்தார் அம்மா.

' அதற்கென்னம்மா இப்போது? விரைவிலே ஏற்பாடு செய்தால் போகிறது என்றுகூறி அல்லி இருந்தபக்கம் பார்த்தேன். அவள் உள்ளே ஓடிவிட்டாள்.

அடுத்த ஊர் பெரிய பண்ணையார் மகனுக்கு அல்லியைக் கேட்கிறார்கள். ஏதோ இடமும் நல்லதுதான். சோற்றுத் துணிக்குக் கவலை இல்லை. மேலும் எங்கள் சாதியுங் கூட !......

அம்மா! பெண் விரும்புவது சோற்றையுந் துணியையு மாத்திரமல்ல. சோறும் துணியும் பெரிய பண்ணையில் மட்டும் கிடைத்து ஏனைய இடங்களில் கிடைக்காதவை அல்ல. எளிய வாழ்க்கை நடத்தும் கூலிக்காரனுக்கு வாய்த்த துணைவிக்கும் இவை கிடைக்கின்றன; பெண் விரும்புவது, எதிர்ப்பார்ப்பது, வேண்டுவது எல்லாம் மனம் நிறைந்த மணவாளனைத்தான் என்பதை மறந்துவிடாதீர்கள். அந்தப் பையனைப்பற்றி..........

இழிந்த நடத்தையுள்ளவன் என்று பிறர் சொல்ல நானும் கேட்டிருக்கின்றேன் சந்திரா! மணமான பின் அல்லி கொஞ்சம் மனம்வைத்து முயற்சி செய்தால் அவன் திருந்தாமலா போய் விடுவான்? அல்லியை அவனுக்குக் கொடுக்கத்தான் எண்ணி யுள்ளேன்' என்று ஏதேதோ அடுக்கிக்கொண்டு போனார் அம்மா. சிறிது நேரத்திற்குமுன் மலர்ந்த அன்பு மொட்டில், அவர் பேச்சென்ற அனற்காற்று வீசி அதைக் கருக்கிவிடுமோ எனநான் அஞ்சினேன்.

அம்மா! அல்லியின்எண்ணத்தைத் தெரிந்துகொண்டீர்களா?

நான் சொன்னால் அல்லி கேட்கவா மாட்டா?

அதற்கில்லையம்மா! அல்லி புதுமைப் பெண். அவள் எண்ணத்தையும் தெரிந்து நடப்பதுதான் நல்லது. சாதி சமயத்தைச் சாக்காகக்கொண்டு, குணமிழந்த ஒரு கொடியவனுக்கு

மணம் செய்வித்து அல்லியின் எழில் வாழ்வை இருளடையச் செய்துவிடாதீர்கள். இரத்த வெறிகொண்டலேயும் காட்டு வேங் கைக்கு வீட்டுப் பசுவைக் கலியாணம் என்ற பெயரால் காணிக்கையாகக் கொடுத்துவிடாதீர்கள். கண்ணற்ற குருட னுக்குக் கொண்டுபோய் அழகான மலரை உரிமையாக்கி அதன் இதழ்களைப் பிய்த்து எறிந்துவிடாதீர்கள்.

என்னப்பா சொல்லுகின்றாய்?

தேன் சிட்டின் இறக்கைகளை வெட்டிவிடாதீர்கள், அதன் விருப்பப்படி வெட்ட வெளியில் பறக்க விடுங்கள். அது சிந்து பாடித் திரியட்டும் என்றுதான் சொல்கிறேன்.

புரியவில்லை சந்திரா. தெளிவாகத்தான் சொல்லேன்.

அம்மா! அல்லியின் நல்வாழ்வில் உங்களுக்கு எவ்வளவு நாட்டம் உண்டோ அவ்வளவு எனக்கும் உண்டு. பண்ணையார் மகன் சின்னதம்பியைப்பற்றி இந்த ஊரே கதைகள் பல சொல் லுமே! கண்ணிருந்தும், கையிலே ஒளி விளக்கிருந்தும் பாழுங் கிணற்றில் ஏனம்மா விழவேண்டும்? ஆகவே, சின்னதம்பிக்கு அல்லியை மணம் செய்துகொடுப்பது என்ற எண்ணத்தைத் தயவுசெய்து விட்டுவிடுங்கள் அம்மா?'' என்று பலபடப் பேசி னேன், நான் பேசவில்லை. என் உணர்ச்சியின் தூண்டுதல் என் னைப் பேசவைத்தது. பசியால் பாடுபல பட்டவனுக்குப் பழ மொன்று கிடைக்க, அதை அவன் வாயிலிடப் போகும்நேரம், அதைப் பறித்துச் செல்ல ஒருவர் வருகின்றார் என்று தெரிந் தால் அவன் எவ்வாறு பதைப்பானோ அவ்வாறு நான் இருந்தேன்.

'சந்திரா! சின்னதம்பிக்கு அல்லியைக் கொடுக்கலாமா என்றுதான் உன்னைக் கேட்டேன் அதற்காக ஏன் இவ்வளவு படபடப்பு?'

அம்மா! அல்லியின் திருமணப் பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள். நான் பார்த்துக்கொள்வேன்' என்றேன் நான். உன் விருப்பம்போலவே நடக்கட்டும் என்றாரே தவிர எனது உண்மையான விருப்பத்தை அவர் அறிந்துகொள்ளவில்லை. நானும் அப்போது அறிவிக்கவில்லை.

சென்ற இதழின் தொடர்ச்சி

பாரி.

ச. பாலசுந்தரம்.

காட்சி 5.

[பாரியும் மகளிரும் உரையாடிக்கொண்டிருக்கின்றனர்—மதியழகி வருகிருள்—பின் கபிலர் வருகிருர். மகளிரின் அரங்கேற்றம்பற்றி முடிவு செய்யப்படுகிறது.]

(பாரி அமர்ந்திருக்கிருன் அங்கவை வருகிருள்)

பாரி : சங்கவை எங்கே குழந்தாய்? தங்கையை
எங்குநீ விட்டிவண் வருகிருய்......

அங்கவை : .... இன்றுநாம்
சுவையெலாம் நிரம்பிய விருந்தொன் றிடுவோம்
எவர்செய் விருந்தினை இன்புடன் தந்தை
உண்ணுகின் ருரோ அவரே வென்றவர்
பண்ணுக நீயும் என்றனள், அவளும்
விருந்துடன் வருவாள் வேற்றுமை யின்றி
அருந்திய பின்னர் அணுவும் தவருது
தீர்ப்புக் கூறுதல் வேண்டும் தாங்கள்
பார்ப்போம்........

பாரி : ... ... அடடே என்னம்மாநீ!
விளங்க உரைத்தால் அன்றோ எனக்கு ... ...

மெய்க்காப்பாளன் :
குழந்தைகள் விருந்தா ஐயோ! மன்னவா!
இழந்தேன் உயிரினை வேண்டாம் வேண்டாம்

அங் : சோற்றுத் துருத்தியே! சொல்வதற் குள்ளே
காற்ருய்ப் பறந்தால் ... ...

மெய் : கடவுளே! தாயே!
எனக்கிருப் பதுவோ ஒரேஒரு உயிர்தான்
நீங்கள் சமைத்த உணவினைத் தாங்கும்
வலியெனக் கில்லை தாயே ... .

அங் : (நகைத்து) ... . மண்டு
வாய்விருந் தல்ல; நீ வருந்தவே வேண்டாம்
ஆய்மொழிப் புலவர் அமிழ்தென உண்ணும்
செவியமு தாகும் ... .

மெய் : (பெருமூச்சுடன்) அம்மா! பிழைத்தேன்.
(அப்பொழுது சங்கவை சுவடியுடன் வருகிருள்)

அங் : அதற்குள்ளாக அமைத்துவிட் டாயோ?

சங் : எதற்கும் நீதான் முந்தி இயல்கிருய்
விரைவாய் எனக்குமுன் வந்துவிட் டாயே
உரைக்க லாமா?

அங் : ... . ஆகா உரைப்போம்.
இப்பொழு தெங்கள் இருவர் கவிதையும்
அப்பா நீங்கள் அமைதியாய்க் கேட்டுச்
செப்புதல் வேண்டும் சிறந்த திதுவென.

பாரி : நல்ல வேளை நான்ஏ தேதோ
எண்ணினேன்.......

மெய் : நல்ல புண்ணியம் மன்னு.

பாரி : முன்னர் விருந்து முடிப்பது யாரோ

அங் : என்னுடை யதுதான்.......

சங் : ... . இல்லை என்னது.

மெய் : சரிசரி இருவர் சமரிடை நமக்கு
விருந்து கிடைப்பது மருந்துதான் அரசே!

பாரி : பொதுவாய் நீயே கூறுக பார்ப்போம்

மெய் : விதிப்படி முதலில் மூத்தவர் விருந்தை......

சங் : ஆயாதுரைத்தாய் அதெப்படி ஆகும்?
காய் முதலாமோ கனி முதலாமோ?
எளியவர் சிறியவர் இவர்க்கே முதலிடம்
அளிப்பது கடமை அரசர்க்(கு)

அங் : ... ... அப்பா

பாரி : இருங்கள்; இந்த வழக்கை எப்படி
என்பதை முடிப்பது....

சங் : முயன்றால் முடியும்

பாரி : வருத்தமிலாமலோர் வழிஉரைக்கின்றேன்
பொருத்த மானுற்பின் பூசல்கூடா
என்ன நான் சொல்வது?

இரு : ... ... சொன்னதைக் கேட்போம்.
கூறுங்களப்பா வேறுபட மாட்டோம்.

பாரி : இருவரும் கவிதை இயற்றினீரல்லவா?
ஒருவரை ஒருவர் பார்க்கவில்லையே?

இரு : இல்லை இல்லை.

பாரி : நல்லது நீங்கள்
எழுதிய கவிதையின் பழுதில்முதற்சீர்
முழுதும் வேண்டாம், முதலாம் எழுத்து
தமிழ்நெடுங் கணக்கின் தகைமையில் முதன்மை
பெற்றதிங்கெதுவோ பேசுதற்கதுவே
உற்றது முதலில் உரைத்தது சரியா?

அங் : அறிவுக் களஞ்சியம் என்றாசிரியர்
அடிக்கடி சொல்வார் அனைத்தும் உண்மை

சங் : முடிக்க முடியா வழக்கிதை எளிதாய்
அடக்கி விட்டீர்கள் அப்பா...

மெய் : ... ... மன்னா!
குழந்தைகளிடத்தும் கோன்முறை தவறாது
எழுந்த நற்சிந்தையை எங்ஙனம் வியப்பேன்?

பாரி : புகழ்ச்சியால் மயக்கி போட்டிடாதீர்கள்,
நிகழ்ச்சியை தொடங்குவோம் நின்னெழுத்தெதுசொல்.

அங் : வா

பாரி : ... . நீ சொல்லு

சங் : ... ... வகரம்

பாரி : வா வா

படையுன் விருந்தைப் பார்ப்போம் உண்டு

[சங்கவை பாடுகிருள் அப்பொழுது மதியழகி வருகிருள் பாடலைக் கேட்டுக்கொண்டே பாரியின் பக்கத்தில் நிற்கிருள்]

சங் : வண்ணப் பசுங்கொடி மாதர் வயிற்றினில்
வந்துபிறந்தனை நீயே — உனை
வாழ்த்துகின் றேன்மலர்ச் சேயே

கண்ணைப் பறிக்குங் கவினுருத் தாங்கினை
கன்னியர் மென்னகை போலே — ஒளி
காட்டு கின்ரு யென்முன்ஞலே

சுற்றிலும் மென்றளிர்த் தோழியர் தாம்பலர்
சூழ்ந்திருந் தாலும்நீ நீங்கி — எழில்
தோற்றுகின் ருய் தலை ஓங்கி.

கற்றறி யாதவிவ் வண்டுகள் பாடுமிக்
கானத்திஞல் விரித்தாயோ — முகம்
காதலிஞற் சிரித் தாயோ.

முல்லைஎனஉனைச் சொல்லிநன் மாதர்
முடித்திடுவார்க் குழல் மேலே — மணம்
மூட்டுவாயுன் னழகாலே.

எல்லை யிலாமணம் எப்படிவாய் ந்தனை
இத்தனை தூய்மையார் தந்தார் — உடல்
முத்தெனவேசொல வந்தாய்.

மாமதிகண்ட மகிழ்ச்சியி ஞலேநீ
மாலையிலே சிரிக்கின்ருய் — மனம்
மாண்புடனே விரிகின்ருய்.

பூமகள் புன்னகை என்றுரைப்பார்கவி
பொய்யெனச் சொல்வது திண்ணம் உனைப்
போற் றுவதேயவர் எண்ணம்

(வளரும்)

(பின்னர் அங்கவை பாடுகிறாள்)

அங்கவை :— வானைத் தொடும்மலை ஏறி நின்றேன்—அந்தி
வண்ணச் சுடரினைக் கண்டு நின்றேன்
தேனை அருவியி லேகுழைத்து—வந்த
தீஞ்சுனை ஓரத்தில் செல்லலுற்றேன்

மஞ்சள் குளித்தொளி வீசுகின்ற—மலை
மங்கைமுன் பெற்றதோர் கற்குழந்தை
தஞ்சமென வந்து தாளடியில்—சிக்கித்
தாக்கிய தால்கையில் நானெடுத்தே

வீச நினைத்தனன் வாய்திறந்தே—எனை
வீசாதே என்று விளம்பியதே
நேசமுடன் தொண்டு மக்களுக்கே—செய்து
நித்தம் இளைக்கின்றோம் என்றதுவே

சின்னஞ் சிறியகல் நீங்கள்செயும்—தொண்டு
செப்புங்கள் என்று சிரித்தனனே
மின்னும் வயிரம்மு தல்மணிகள்—மலை
மேனியாள் பெற்றநற் பிள்ளைகளாம்

பேருரு வாகஇ ருக்கையிலே—நாங்கள்
பேரர ணாகவே காவல் செய்தோம்
சீறுருவாகச் சிதைந்த பின்னே—வீடு
செப்பமாய்க் கட்ட உதவிடுவோம்

தேய்ந்து சிதைந்திட்ட போதிலும்யாம்—நதி
சேர்ந்துநன் நீராய்த் திகழவைப்போம்
ஆய்ந்துபார் மண்ணும் மணலுமெலாம்—எங்கள்
ஆகஞ் சிதைந்த உருவ மன்றோ.

எவுங் கவணில் இருந்திடுவோம் — பதி
எல்லைகளாக விளங்கிடுவோம்
சீவன் விளங்கிடும் சிற்பமெல்லாம் — எங்கள்
சின்ன உருவினில் ஆனதம்மா.

எங்களை இன்றியிஞ் ஞாலமுண்டோ — எழில்
ஏற்றத்திற் கொப்புமை சொல்லுவரால்

எங்குந் திரிகின்ற கார்மழையைத் — தடுத்
தேகும் நதிபல செய்திடுவோம்.

நீரும் நிலமுமில் லாமலிங்கே — உயிர்
நிச்சயம் தோன்ற முடியாதம்மா
சீரும் சிறப்புமிலாத மக்கள் — எமைச்
சின்னவ ராகநினைத் தாரம்மா.

ஈசனை எங்கள் உருவிளக்கும் — இதை
எங்கணும் காணலாம் என்றதுதான்
பேசி முடித்ததிஞ் ஞாலமெலாம் — ஒரு
பேரொளி கண்டு வியந்து நின்றேன்.

பாரி :- மாமலையின் கற்களுடன் வண்ண மலருமொன்ருய்
நாமறிந்து நல்லியல்பை நாடுதலே — ஏமமெனும்
கூர்த்தமதிக் கண்மணிகாள்! கோல விழியிரண்டுள்
சீர்த்ததெது கூறுங்கள் சேர்ந்து?

மதியழகி :- கவிஞர் பெருமான் காத்திருப்பார்நீர்
கவிதை பேசிக் களிக்கின் றீரோ?

(அப்பொழுது கபிலர் வருகின்ருர் எல்லோரும் எழுந்து வணங்குகின்ருர்கள்.)

பாரி : அறிவு மன்னவ அடியேன் வணக்கம்
வருக வருக

மதியழகு : .... பெரியோய்! வணக்கம்.

கபிலர் : வாழிய! நின்புகழ் வளர்கநின் வண்மை

பாரி : நாழிகை கழிவதை நான் உணராமல்
கண்மணி இவர்களின் கவிதையில் மூழ்கி
விண்ணவர் இன்பம் மேற்படிந் திருந்தேன்
தாங்களே இவ்விடம் வந்திட நேர்ந்தது.

அங் : மன்னிக்க வேண்டும்

கபிலர் : ... ... என்னிடம் இனிமேல்
இவர்களுக் கலுவல் இல்லை மன்ன!

(தொடரும்)

சென்ற இதழின் தொடர்ச்சி.

புயல்.

ஆசிரியர்: **செகப்பிரியர்.**

மொழி பெயர்ப்பாளர்: **புலவர். R. ஏகாம்பரநாதன்.**

அங்கம்—3. களம்—2.

கலியன் :— பார்த்திங்களா கணேசச்சாமி இவர் எப்போதும் என்னை இகழ்ந்து பேசுகிறார் நீங்கள் அதைக்கேட்டுக் கொண்டே இருக்கலாமா? நான் உங்கள் ஆள் அல்லவா?

திருக்கு :— அடே, இந்த மீன் மனிதனுக்கு என்ன உணர்ச்சிடா வருது?

கலியன் :— பாருங்கள் என்னை மீன் என்றும் மனிதன் என்றும் எவ்வளவு இகழ்ச்சியாக இந்த ஆள் பேசுகிறார்?

கணேசன் :— அடே, திருக்கு நமது அரசாங்கத்தில் வம்பு சண்டை ஒன்றும் இருக்கக்கூடாது. சண்டை ஏற்பட்டால் என்னுடைய குடியை இந்த மச்ச மனிதனைக் காக்க வேண்டி உன்னை அடுத்த மரக்கிளையில் தூக்கிப் போடுவேன். தெரியுமா? கலியா நீ சொல். ம் சொல்லு.

கலியன் :— இந்தத் தீவு முதலில் எனக்குச் சொந்தமாயிருந்தது. இங்கே மந்திரவாதி ஒருவன் வந்தான். அவன் என்னை அடிமையாக்கிக்கொண்டு என் தீவையும் பிடுங்கிக் கொண்டான். அவனிடத்திலிருந்து இத் தீவைப் பிடுங்கி உம்மிடம் தந்து உமக்கு அடிமையாயிருக்கத்தான் எனக்கு விருப்பம். அக்கொடியவனை உங்களால் தொலைக்க முடியும்.

கணேசன் :— கலியா அப்படியானல் அவனைத் தொலைக்க உனக்கு ஏதாவது உபாயம் தெரியுமா? எங்கே சொல்லு.

கலியன் :— அது மிகவும் சுலபம். அவர் தூங்கிக் கொண்டிருக்கும் இடத்திற்கு நான் தங்களை அழைத்துச்

செல்வேன். அவர் தூங்கும்போது தலையில் ஒரு ஆணியை அடியுங்கள்.

(மறைவாகக் காத்தவன் — அது உன்னால் முடியாது)

கணேசன் :— ஏ, திருக்கு இந்தா இந்த உதையை வாங்கிக்கொண்டு இந்த நினைவோடு இனிப் பேசாமல் இரு. இனி குறுக்கிடாதே.

(இரண்டு உதை தருகிறான் கணேசன் திருக்குக்கு)

திருக்கு :— ஐயோ நான் ஒன்றும் சொல்லவில்லையே, என் குரல்கூட உனக்குத் தெரியவில்லையா? நான் வாயைத் திறக்கவில்லையே.

கலியன் :— சாமி, இன்னும் இரண்டு உதை தந்து அவரை எட்டி விரட்டுங்கள். அவரைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்கவில்லை. அவர் பார்த்தாலும் நம் காரியம் கெட்டுவிடும்.

கணேசன் :— ஏய் திருக்கு எட்டிப்போடா. கொஞ்ச நாழிகழித்து வாடா. கலியா, நீ சொல்லு.

கலியன் :— அவர் வழக்கமாகப் பகல் உணவு உண்டு நன்றாகத் தூங்குவார். அந்தச் சமயம் பார்த்து அவர் மண்டையை உடைக்கணும். ஆனால் அதற்கு முன்னாலேயே அவருடைய மந்திரப் புத்தகத்தை எடுத்து மறைத்து வைக்கணும். அவர் புத்தகம் போனாலே அவருக்கு மூளை போய்விடும். ஒன்றும் நடக்காது. பிறகு கட்டைதான் அவரு. அவருக்குக் காத்தவராயன் கூட்டமும் வேலை செய்யாது. அவருடைய பெண் அப்பெண்ணின் அழகு எல்லாம் அவருக்கு ஒண்ணுமே இல்லை. எங்கம்மாளைக்காட்டிலும் அவள் மிகவும் அழகி. அவள் உனக்குக் கிடைச்சால் அப்புறம்.......

கணேசன் :— அடே, கலியா அந்த ஆளைக் காட்டு உடனே அவனைக் கொன்று அந்தப் பெண்ணை அரசியாக்கி இந்த அரசன் இத்தீவுக்கு முடிமன்னனாகவேண்டும். ஏய் திருக்கு நீயும் வாடா உதை நினைவில் இருக்கிறதா? இந்த

இரகசியம் வெளியில் வந்தால் உடனே நல்ல உதைதான். கவன மாக இருங்கள் புறப்படுவோம். கலியா வழிகாட்டு.

கலியன் :— இதுவே நல்ல சமயம்தான் சாப்பிட்டுத் தூங்குவாரு நம் காரியத்தை முடித்துவிடலாம்.

(காத்தவராயன் இவர்களறியாமல் — தனது தலைவன் சயசீல னிடம் சொல்வதற்காகப் போகுமுன் — சில பாடல்களை மறை வாகப் பாடிவிட்டுச் செல்கிறான்)

கலியன் :— இத்தீவே இசைத் தீவு. எனக்கு மகிழ்ச்சி வரும்போது கொஞ்சம் இசையும் வரும். நாம் சேர்ந்து பாடிக் கொண்டு செல்லுவோமா? வழி நடையும் தோணுதல்லவா?

கணேசன் :— நீ சொல்லும்போது நான் வேண்டா மென்று சொல்லுவேன் கலியா, திருக்கு வாடா, சேர்ந்து மூவ ரும் பாடுவோம். தடியடி அடிப்போம் – இடியுதை – தருவோம் எதை எதை நினைத்தோம்—அது செய்து முடிப்போம் முடிப் போம் முடிப்போம்.

(காத்தவன் — "எனையாளும் ஈசன் செயல் இவையெல்லாம் மாற்றிச் செயும்" உங்கள் பாடலுக்குச் சந்தம் இதுடா. நீங்கள் பாடுவது தப்படா)

திருக்கு :— ஏய், இந்த ஒலி என்னதல்ல. தெய்வ ஒலி இந்தத் தீவுத் தெய்வம் அது. ஓ, தெய்வமே என்னை மன்னி. கணேசனைக் கவனித்துக்கொள். எனக்கு ஒன்றும் தெரியாது.

கணேசன் :— திருக்கு, உதை வேணுமா? மன்னிப்பாவது தெய்வமாவது. உயிரோடு இருக்கிறவன் பேச்சாடா இது. செத்தவன் பேசுகிற பேச்சல்லவா இது? நான் எதற்கும் பயப் படமாட்டேன். அடே ஆகாய ஒலியே, நீ மனிதனுயிருந்தால் எதிரே வா. பேயாயிருந்தால் ஓடிப்போ. கலியா, நான் பேய்க்குப் பயப்படமாட்டேன்.

கலியன் :— திருக்காலேதான், நீங்கள் பயப்படமாட்டீர்கள்

கணேசன் :— எனக்குப் பயமே கிடையாது. அது எல்லாம் பிறப்பிலே அமைப்பு (இடி ஒலி வானில் உண்டாகிறது) அர்ச்சுனன் பேர் பத்து. அர்ச்சுனா காப்பாற்று. கலியா, இது என்ன இத்தீவில் இசையொலியும் இடியொலியும் நம் பாடலை மிஞ்சுகின்றனவே.

கலியன் ;— இத்தீவே இப்படித்தானுங்கள். ஒரே சமயத்தில் பல இசை ஒலிகள் இசைக்கருவிகளின் விதவிதமான ஒலிகள், மிருகங்களின் ஓசை, கடலின் அலை ஒலி, காற்றாலி மரங்கள் ஒடியும் படபட ஒலி, இடியொலி எத்தனையோ ஒலிகள் ஆனால் இவை ஒருவருக்கும் ஒருபோதும் தீங்கு செய்ததில்லை. நல்ல மனத்திற்கு அதிக இன்பத்தைத் தருவதாகவே இருக்கும். சில சமயம் இசையைக் கேட்டுக்கொண்டே தூங்குவேன். ஆயிரம் வீணைகளின் சேர்ந்த ஒலி கேட்கும். உடனே விழித்துக்கொள்வேன். மீண்டும் இசையின் சக்தி என்னைத் தூங்கவைத்துவிடும். நாம் இப்போது பேசிக்கொண்டிருப்பது கனாவென்று சொல்லும்படியாக எனக்குச் சில சமையம் சில உண்மைகள் தோன்றும். நான் இத்தீவைவிட்டு ஆகாயம் செல்வேன். மேகங்கள் அழகான அரண்மனைகள் கட்டித்தரும். பலவகை வாகனங்களைத்தரும். விரைவாக அவற்றை ஓட்டிக் காட்டும். நவ இரத்தினங்களையும் எனக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கும். நான் அப்படியே அனுபவித்துத் தெவிட்டிப் போவேன். இப்போது தூக்கம் வந்தால் நம்மை மறப்பதுபோல அப்போது விழிப்பு வந்து அவற்றை மறக்கச் செய்யும். இப்படியாக நான்.......

கணேசன் :— சரிடா கலியா எனது அரசாங்கத்தில் சங்கீதப் பைத்தியம் எல்லாவற்றையுமே மறக்கடித்துவிடும்போலல்லவா இருக்கிறது?

கலியன் :— அக்கொடிய சயசீலன் தொலைந்த பிறகல்லவா தங்களுக்கு அரசாங்கம் வரும்?

கணேசன் — ஆமா, அதற்காகத்தானே போகிறோம். திருக்கு வாடா. கலியா, முன்னே சென்று வழி காட்டு; நாங்கள் பின்னே வருகிறோம். (தொடரும்)